# *புனித மார்த்தாள் (-84)*

இவள் மரியாள், லாசர் இவர்களுடைய சகோதரி. பெத்தானியா என்னும் ஊரில் வசித்தாள். அது யெருசலேமிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. ஒலிவ மலைக்குச் சிறிது அப்பால் உள்ளது. இவளது குடும்பம் நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாக வேதபுத்தகத்திலிருந்து நாம் அறிகிறோம். மூன்று முறை வேதபுத்தகத்தில் இவளைப் பற்றி பார்க்கிறோம். 1) இயேசு இவளது வீட்டிற்குச் சென்றார். அவருக்குப் பணிவிடை செய்வதில் மார்த்தா முனைந்து நின்றாள். மரியாள் தனக்கு உதவி செய்யவில்லை என்று ஆண்டவரிடம் இவள் முறையிட்டாள். 2) லாசரை உயிர்த்தெழுப்பு முன் உடலின் உத்தானம் என்னும் ஆறுதல் தரும் உண்மையைப் பற்றி மரியாளுக்கும் இவளுக்கும் இயேசு எடுத்துரைத்தார். 3) பாஸ்காவுக்கு ஆறு நாள் இருக்கும் பொழுது இயேசு பெத்தானியாவுக்கு வந்தார். அங்கேதான் லாசரை இறந்தோரின்று உயிர்ப்பித்தது. அங்கு அவருக்கு விருந்து அளித்தனர். மார்த்தாள் பணிவிடை செய்தாள். அவரோடு பந்தியமர்ந்தவர்களுள் லாசரும் ஒருவர். இயேசு பரலோகத்துக்குப் போன பின் மார்த்தாள் பிரான்ஸ நாட்டிற்குச் சென்றார். அங்குள் தாஸ்கோன் என்னுமிடத்தில் அவளது உடலை கண்டு பிடித்தார்கள். இப்பொழுது அது அந்நகரிலுள்ள ஓர் ஆலயத்தில் அழகுற வைக்கப்பட்டிருக்கிறது.

**சிந்தனை:**

நம் உடல் ஒரு நாள் மகிமையோடு உயிர்த்தெழும்பும், ஆனால் இப்பூமியிலிருக்கும் பொழுது நன்மை செய்வதில் ஆன்மாவுக்கு உடல் உதவியாயிருக்க வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, ஏழைகளிடமாய் நாங்கள் உமக்கு சேவை செய்யும் வரத்தைத் தாரும்.